## சுகததாச தேசிய விளையாட்டுக்கள் தொகுதி அதிகாரசபை – 2015

---

சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக்கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத் தொகுதி அதிகாரசபையின் 9(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வூடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்காக தற்றுணிவு அதிகாரத்தை 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3) ஆம் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காத பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 3

நியமத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் தொடர்பாகக் குறிப்பிட்ட பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இல்லாதவிடத்து கணக்கீட்டுக் கொள்கையை முகாமைத்துவமே உருவாக்கி அதனைச் செயற்படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபடலாம். இதற்கு முரணாக, 5 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வரும் நிலுவை மீதிகளது 75 சதவீதமான ரூபா 32,898,350 நடப்பாண்டில் பதிவழிக்கப்பட்டிருந்ததுடன், குறித்த ஒவ்வொரு ஆண்டிற்குமான இலாபத்திற்குச் சீராக்கல் மேற்கொள்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேற்றில் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், வங்கி மேலதிகப் பற்றாகிய ரூபா 28,766,675 நடைமுறைப் பொறுப்பாக காட்டப்படுவதற்குப் பதிலாக காசு மற்றும் காசுக்கு நிகரானவையாக உள்ளடக்கப்பட்டு நடைமுறைச் சொத்துக்களில் ஈடுசெய்யப்பட்டிருந்தது.

#### (ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07

(i) நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 259.8 மில்லியன் கிரயமுடைய நிலையான சொத்துக்கள் முற்றாகத் தேய்மானத்திற்குள்ளாகியிருந்தபோதும், தொடர்ந்து பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. அதற்கமைவான மதிப்பிடப்பட்ட வழுவானது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இற்கமைய மீளாய்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) நியமத்தின் 49 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்தொன்று மீளப் பெறுமதியிடப்படுமாயின் அச்சொத்துக்குரிய சொத்து வகைகள் யாவும் முற்றாக மீளப் பெறுமதியிடப்படவேண்டும். எவ்வாறாயினும், அதிகாரசபை இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களை மீளப் பெறுமதியிடும்போது போகம்பரை, நுவரெலியா, ஆர். பிரேமதாச விளையாட்டரங்கு ஆகிய இடங்களில் பயன்படுத்தப்பட்ட ரூபா 8,307,878 கிரயமுடைய இயந்திர சாதனங்களை 2015 சனவரி 01 இல் உள்ளவாறு மீளப்பெறுமதியிடவில்லை.

(iii) நியமத்தின் 69 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்தொன்று பயன்படுத்தப்படுவதை ஆரம்பிக்கும் நிலையை எய்தியதன் பின்னரே அதற்கான தேய்மானமும் ஆரம்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், சுகததாச விளையாட்டரங்கில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கடைகளதும் அலுவலகங்களதும் கட்டிடத்திற்கான அத்திவாரம் மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டிருக்கையில், அதற்கான ரூபா 16,103,042 செலவினத்தை 2014 ஆம் ஆண்டின்போது மூலதனமாக்கி 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான தேய்மானமாக ரூபா 805,152 நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(iv) நியமத்தின் 90 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 9,334,652 பெறுமதியுடைய மீளப் பெறுமதியிடப்பட்ட இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றுக்குத் தேவையான வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்படவில்லை.

### 2.2.2 எதிர்பாராப் பொறுப்புகள்

அதிகாரசபைக்குச் சொந்தமான இரு பணிகளில் ஈடுபடக்கூடிய வாகனத்தால் விபத்துக்குள்ளாகி மரணமாகிய பெண் ஒருவரது உறவினர்களால் ரூபா 50 மில்லியன் நட்ட ஈடு கோரி நுகேகொட மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கால் ஏற்பட்டுள்ள எதிர்பாராப் பொறுப்பு நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்படவில்லை. இவ்விபத்து சம்பந்தமாக நிதிப் பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது திருப்பிச் செலுத்தப்பட்ட வைப்புகள் ரூபா 10,669,696 ஆகுமென நிதிக்கூற்றில் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் மீதி ரூபா 15,191,048 ஆகியமையால் ரூபா 4,521,352 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) அதிகாரசபையினது மீளாய்வாண்டிற்குரிய கணக்கின் பிரகாரம் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 21,153,845 ஆகும். எவ்வாறாயினும், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் கணக்குகளின் பிரகாரம் அது ரூபா 18,373,845 ஆகியமையால் ரூபா 2,780,000 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

நானாவித கடன்பட்டோரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 43,912,053 ஆகும். அம்மீதியில் உள்ளடங்கிய 05 ஆண்டுகள் முடிவடைந்த ரூபா 32,744,245 அறவிடப்படுவது தொடர்பாக அதிகாரசபை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

**2.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை**

பின்வரும் கணக்கீட்டு விடயங்களுக்குரிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| கணக்கீட்டு விடயம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| வர்த்தக் கடன்பட்டோர், ஏனைய கடன்பட்டோர் மற்றும் நிறுத்தி வைத்த தொகை | 71,696,742 | மீதிகளை உறுதிப்படுத்தலும் விரிவான பட்டோலையும் |
| கையிருப்பு | 2,149,491 | கையிருப்புப் பதிவேடும் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளும் |

**2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1999 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 3(2) ஆம் பந்தி | அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் தொழிற்படு பணிப்பாளர் பதவி உருவாக்கப்பட்டிருக்காதபோதும், பணிப்பாளர் சபையின் அங்கத்தவர் ஒருவர் மாதாந்தம் ரூபா 60,000 கொடுப்பனவு செய்யப்படும் அடிப்படையில் தொழிற்படு பணிப்பாளர் பதவியில் நியமிக்கப்பட்டிருந்தார். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்டு 6 மாதங்களைக் கடந்தும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாதிருக்கும் ரூபா 420,598 கூட்டுத் தொகையையுடைய 22 காசோலைகள் சம்பந்தமாக அதிகாரசபை அவ்வவ்போது நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 571 | இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 2,386,109 கூட்டுத் தொகையையுடைய வைப்புகளைத் திருப்பியளிப்பதற்கோ அல்லது வருவாயிலிடுவதற்கோவான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 754 | நிதியாண்டு முடிவில் பட்டோலையிலிடப்பட்ட பொருட்களது பதிவேடு கணக்கிணக்கஞ் செய்யப்படாதிருந்தது. |

| | | |
|---|---|---|
| (iv) | நிதிப்பிரமாணம் 755(1) | கடமை நீங்குவதற்கோ, இடமாற்றம் பெறுவதற்கோ அல்லது நீண்ட விடுமுறையைப் பெறுவதற்கு முன்னரோ எந்தவொரு உத்தியோகத்தரும் அப்பணி ஒப்படைக்கப்பட்ட ஒருவருக்குத் தமது பொறுப்பில் உள்ள சகல அரசாங்க பொருட்களையும் பிற சொத்துக்களையும் ஒப்படைத்து அவற்றைப் பொறுப்பேற்பவரிடமிருந்து அவற்றைப் பெற்றுக்கொண்டதற்கான பற்றுச்சீட்டை இரு பிரதிகளில் பெறவேண்டுமாயினும், 2016 பெப்ரவரி 02 ஆந் திகதியன்று சேவையிலிருந்து ஓய்வு பெற்ற களஞ்சியப் பொறுப்பாளர் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (v) | நிதிப்பிரமாணம் 756 | மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பொருட் கணிப்பு மேற்கொள்ளப்படவில்லை. |
| (vi) | நிதிப்பிரமாணம் 758 | தெரிவுச் செவ்வைகளை மேற்கொண்டு அநாவசியக் கையிருப்பு அல்லது பயன்படுத்தமுடியாத கையிருப்பை இனங்காண்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (vii) | நிதிப்பிரமாணம் 762 | கையிருப்பு மட்டத்தை நிச்சயப்படுத்தியவாறு கொள்வனவுகளை மேற்கொள்ளாமையால் தேவைக்கதிகமான கையிருப்பு இருந்ததுடன், 1 முதல் 13 ஆண்டுகளாக வழங்கப்படாதிருந்த எழுதுகருவி வகைப் பொருட்கள், மின்சாரத் துணைப்பாகங்கள், நீர்க்குழாய்த் துணைப்பாகங்கள், பூசுவதற்கான மை போன்ற ரூபா 1,252,847 கூட்டுத் தொகைப் பெறுமதியுடைய கையிருப்பு மீதி நிலவியது. |
| (இ) | 2002 நவம்பர் 18 ஆந் திகதிய ஐஏஐ/1/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனிகள் மற்றும் மென் அணிகளுக்கெனப் பிறிதாக ஒரு நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படவில்லை. |
| (ஈ) | 2006 அரசாங்க பொருட்கொள்வனவு வழிகாட்டிக் கோவை வழிகாட்டல் 5.4.12 | கொடுப்பனவு செய்யப்பட்ட பெறுமதி சேர் வரி விபரம் மாதாந்தம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்படவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான அதிகாரசபையின் நிதிப்பெறுபேறு ரூபா 246,797,597 பற்றாக்குறை ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 71,308,087 ஆகும். இதனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப்பெறுபேற்றில் 246 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 175,489,510 நலிவு ஏற்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது வருமானம் ரூபா 34,992,303 குறைவடைந்தும் ஐயக் கடன்களுக்கு ரூபா 32,898,350 நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தமையுமே மேற்படி நிதிப்பெறுபேற்று நலிவுக்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிப்பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில், 2012 முதல் 2015 வரை நிதிப்பெறுபேறு நலிவடைந்திருந்தது. எனினும், 2013 ஆண்டிற்கு ஒப்பாக 2014 ஆம் ஆண்டின்போது அந்நலிவானது குறைவடைந்திருந்ததுடன், மீண்டும் மீளாய்வின்போது அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஊழியர்களது ஊதியம், நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானம் மற்றும் அரசாங்க வரி என்பவற்றை மீண்டும் சீராக்கல் செய்கையில் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 90,592,946 ஆகவிருந்த அதிகாரசபையின் மிகையானது தொடர் அதிகரிப்புக்குள்ளாகி மீளாய்வாண்டின்போது ரூபா 799,261 வரை நலிவடைந்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டில் 2.61 ஆகவிருந்த நடைமுறை விகிதம் மீளாய்வாண்டின்போது 1.60 வரை வீழ்ச்சியடைந்திருந்தது. துரித விகிதம் 2.5 முதல் 1.52 வரை வீழ்ச்சியடைந்திருந்தது. அதற்கமைய, நிறுவனத்தின் குறுகிய கால பொறுப்புகளைத் தீர்த்து வைப்பதற்கான ஆற்றல் குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

அதிகாரசபை நிறுவப்பட்ட 1999 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், நிறுவனத்தின் நோக்கம் யாது என்பது நிச்சயமாகக் குறிப்பிடப்படாதபோதும், மைதானங்களிலும் திடல்களிலும் போட்டிகள், நீச்சல் போட்டிகளை நடாத்துதல் மற்றும் பயற்சிச் செயலமர்வுகளை நடாத்துவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல், பரீட்சைகள், கருத்தரங்குகள், மாநாடுகள் என்பவற்றை நடாத்துதல் மற்றும் பொதுமக்களின் ரசனைக்காக உள்ளரங்க வசதிகளை வழங்குதல், விளையாட்டாளர்களுக்கு விடுதி வசதிகளை வழங்குதல் மற்றும் அவற்றிற்குச் சமூகமளிப்பவர்களுக்கு வாகனத் தரிப்பிட வசதிகளை வழங்குதல் என்பன நிறுவனத்தின் கடமைகளாகும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகாரசபைக்குச் சொந்தமான மற்றும் அதன்மூலம் நிர்மாணிக்கப்படுகின்ற விளையாட்டுத்துறை ஹோட்டல் 2015 ஆம் ஆண்டின் போது முறைப்படி வலைகள் பொருத்தப்பட்டு பராமரிக்கப்படாததால் விடுதிகளில் உள்ளோருக்குப் பறவைகளால் பெரும் பாதிப்பு ஏற்படுவது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2011 ஆம் ஆண்டில் ரூபா 112 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட 400 மீட்டர் செயற்கை விளையாட்டு மைதான ஓடு பாதை 2 மாதங்களின் பின்னர் சேதமடைந்ததால் விளையாட்டுப் போட்டிகளை நடாத்த முடியவில்லை.

**4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தனியார் துறை நிறுவனங்களது பிரசார நடவடிக்கைகளின் மூலம் வருமானத்தையும் அதிகாரசபையின் சேவை வழங்கலையும் அதிகரிக்கும் நோக்குடன் அதிகாரசபை 2 இலக்கத் தொழில்நுட்ப விளம்பர (Digital) பலகைகளை ரூபா 10 மில்லியன் மதிப்பீட்டில் கொழும்பு ஸ்ரீமாவோ பண்டரநாயக்க மாவத்தையின் எதிர்புறத்தே சுகததாச திறந்த விளையாட்டரங்கு வளாகத்தில் நிர்மாணிப்பதற்குத் திட்டமிட்டிருந்தது. அதற்கமைய, ரூபா 4.9 மில்லியன் செலவில் ஒரு விளம்பரப் பலகை மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதிகாரசபை வழங்கும் சேவைகள் தொடர்பாக விரிவான பிரசாரங்களை மேற்கொள்வதன் மூலம் அதிகாரசபையின் சேவை வழங்கலை அதிகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையால் எதிர்பார்த்த நோக்கத்தை அடைவதற்கு அதிகாரசபை தவறியிருந்தது. மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் ரூபா 5 மில்லியன் அங்கீகாரம் இல்லாது திறந்த விளையாட்டரங்கின் நிர்மாண வோல்ச் செயற்திட்டத்திற்கு மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் சிற்றுண்டிச் சாலையை நிர்மாணிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ரூபா 10 மில்லியனாகும். முறையான அங்கீகாரம் இல்லாது இத்தொகை பாதுகாப்புக் கெமரா முறைமையை நிறுவும் செயற்திட்டத்திற்கெனப் பயன்படுத்தப்பட்டிருந்தபோதும், அச்செயற்திட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட பாதுகாப்புக் காட்சிகள் தெளிவற்று இருந்தமையால், கெமரா முறைமை அடிக்கடி செயலிழந்து செயற்திட்டம் தோல்வியடைந்திருந்தது.

(இ) அதிகாரசபைக்குச் சொந்தமான விளையாட்டுத்துறை ஹோட்டலின் சிற்றுண்டிச்சாலை உடன்படிக்கை ஏதுமின்றி வியாபாரி ஒருவரால் 04 மாதங்களுக்குப் பயன்படுத்துவதற்கு வசதியளிக்கப்பட்டிருந்தது. அதற்குரிய குத்தகைப் பணம், மின்சார, நீர்க் கட்டணம் என்பவற்றிற்கென அறவிடப்பட வேண்டிய ரூபா 252,929 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை 2018 மார்ச் மாதத்திலும் மேற்கொள்ளப்படாதிருந்தது.

**4.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

அதிகாரசபைக்குச் சொந்தமான 42 அறைகளையுடைய விளையாட்டுத் துறை ஹோட்டலின் 03 அறைகள் ஓராண்டாகவும் 800 சதுர அடியுடைய கீழ்த்தளம் 08 ஆண்டுகளாகவும் பயனற்றிருந்தன.

**4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபை கொடுப்பனவு செய்ய வேண்டிய பெறுமதி சேர் வரி குறித்த காலத்தினுள் கொடுப்பனவு செய்யப்படாமையால் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு ரூபா 3,310,537 தண்டப்பணத்தை வழங்க வேண்டியேற்பட்டது.

(ஆ) பொருட் கொள்வனவு வழிகாட்டி நடைமுறைகளுக்குப் புறம்பாக ரூபா 30 மில்லியனுக்குக் குறைவான வேலையை நிலமீட்புக் கம்பனி மூலம் மேற்கொள்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதும், அதற்க முரணாக ரூபா 63 மில்லியன் மதிப்பீட்டுடனான விளையாட்டுத்துறை ஹோட்டலை நவீனமயப்படுத்தும் நடவடிக்கை 03 கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு பொருட் கொள்வனவு வழிகாட்டிக்குப் புறம்பாகத் தெரிவு செய்யப்பட்ட அக்கம்பனிக்கு 2015 ஏப்ரல் 08 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம், இந்த வேலை 2015 ஆகஸ்ட் 04 ஆந் திகதி முடிவடைய வேண்டுமாயினும், அவ்வாறு முடிவடையாதிருந்தது. 2018 மார்ச் மாதமளவிலும் வேலை முடிவடையாதிருந்தது.

(இ) ஏறக்குறைய 10 ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாதிருக்கும் 990 சதுர அடியுடைய சிற்றுண்டிச்சாலையை கூறுவிலைகள் கோராது 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 40,000 மாதாந்த வாடகைக்குக் குத்தகையாக வழங்கப்பட்டிருந்தது. குத்தகையைப் பெற்றவர் மேலும் 214 சதுர அடியை சிற்றுண்டிச்சாலைக்குப் பணம் செலுத்தாது பயன்படுத்தியிருந்தார்.

### 4.5 பதவியணி நிர்வாகம்

அதிகார சபையால் பாதுகாப்புச் சேவைக்கென ஆட்சேர்க்கப்பட்ட 27 உத்தியோகத்தர்கள் அச்சேவையில் ஈடுபடுத்தப்படாது, காசாளர், உள்ளகக் கணக்காய்வு போன்ற கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

### 4.6 வாகனப் பாவனை

விளையாட்டுத்துறை அமைச்சிற்குச் சொந்தமான கெப் வண்டி ஒன்று முறையாக அதிகாரசபையால் சுவீகரிக்கப்படாது அதிகார சபையால் காப்புறுதி செய்யப்பட்டிருந்தது. அக் கெப் வண்டி பழுதுபார்க்கப்படாமையால் பயன்படுத்தப்படாதிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத்துறை | அவதானிப்புகள் |
| --- | --- |
| (அ) சொத்துக்கள முகாமைத்துவம் | (i) சொத்துக்களின் பெறமதி பிழையின்றி மூலதனமாக்கப்படாமை. |
| | (ii) நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை |
| | (iii) முற்றாகத் தேய்மானத்திற்குள்ளாகியபோதும் பயன்படுத்தப்பட்டவாறிருக்கும் சொத்துக்களை மீளப் பெறுமதியிட்டுக் கணக்கிலிடாமை. |
| (ஆ) கணக்கீடு | கணக்கீட்டிற்கெனக் கொள்வனவு செய்யப்பட்ட மென் அணியின் மூலம் மொத்தக் கணக்கீட்டு முறைமையும் செயற்படுத்தப்படாமை. |

| | | |
|---|---|---|
| (இ) | கடன்பட்டோர் கட்டுப்பாடு | (i) கடன்படுவதற்கான அதி கூடிய வரம்பையும் காலத்தையும் நிர்ணயிக்காமை.<br>(ii) கடன்பட்டோர் மீதிகள் உறுதிப்படுத்தாமை |
| (ஈ) | மனிதவள முகாமைத்துவம் | கைவிரல் அடையாள இயந்திரத்தை முறைப்படி செயற்படுத்தாமை |
| (உ) | ஒப்பந்த நிர்வாகம் | தேவையை முறைப்படி இனங்காணமை, பொருட் கொள்வனவு வழிகாட்டலைக் கடைப்பிடிக்காமை, மதிப்பீட்டைச் சரிவரத் தயாரிக்காமை, முறையான மேற்பார்வையின்மை, தண்டப்பண அறவீடு போன்ற முதன்மையான விடயங்களில் விசேட கவனம் செலுத்தாமை |